தனி அலுவலர், தையூர் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.

ந.க.எண்.394/2019/ஆ1. நாள்.22.03.2019

பொருள் - மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - தையூர் ஊராட்சி மற்றும் கிராமம் Mr.Syed Muneer Ahmed, M/s.House Life Housing and Properties pvt.Ltd., என்பவரின் சர்வே எண். 346/2, 354/1A, 1B, 2A, 2B, 3, 355/2A, 2B, 2C, 1351/2-ல் 5.98 ஏக்கர் பரப்பு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது - மனைப்பிரிவு அனுமதித்து உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை - 1.உறுப்பினர் செயலர் (பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம், அவர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்ட ந.க.எண்.245/2016/மாஉதிகு. நாள்.27.12.2018.
2.தானபத்திரம் எண்.916/2019. நாள்.28.01.2019.
3.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம்-2-ன் கள ஆய்வு அறிக்கை நாள். . .2019.
4.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.22.03.2019.
5.தையூர் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.133 நாள்.22.03.2019. மற்றும் பலவகை வரவு ரசீது எண்.4915 நாள்.22.03.2019.

*********

**உத்திரவு**

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம தையூர் ஊராட்சி மற்றும் கிராமம் Mr.Syed Muneer Ahmed, M/s.House Life Housing and Properties pvt.Ltd., என்பவரின் சர்வே எண். 346/2, 354/1A, 1B, 2A, 2B, 3, 355/2A, 2B, 2C, 1351/2-ல் 5.98 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு, மாமல்லபுரம் உள்ளூர்திட்டக் குழுமம், மாமல்லபுரம் அவர்களின் ம.வ./ மா.உ.தி.கு எண்.21/2019-ன்படி ஒப்புதல் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் தானபத்திரத்தின் மூலம் தையூர் ஊராட்சிக்கு சாலை, மூலைமுடுக்கு மற்றும் பூங்கா ஆகிவற்றை சேர்த்து, 97158.55 சதுரடி ஊராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 4(ம) 5-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, வளர்ச்சிக்கட்டணம் ரூ.3,26,466/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தாறாயிரத்து நாநூற்று அறுபத்தாறு மட்டும்) ஊராட்சியில் செலுத்தியமைக்கான பலவகை வரவு ரசீது எண்.4915 நாள்.22.03.2019 மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில்

Scanned by CamScanner

(கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றும் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3) எந்த ஒரு அடிப்படை வசதிக்கான கட்டமைப்பு பணி முடிவுற்ற பின்னர் இவ்வொன்றிய பொறியாளரிடம் அதற்கான தரச்சான்று பெற வேண்டும்.

4) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

5) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

6) மனைப்பிரிவு சிறப்பு நிபந்தனைகளான 19 (இ) மற்றும் 19(உ) குறித்து ஏதேனும் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

7) இம்மனைப்பிரிவு தொடர்பாக பார்வை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 26 வரையிலான நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படவேண்டும். நிபந்தனைகள் மீறும் வகையில் இம்மனைப்பிரிவு நிலஉரிமை குறித்து ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டால் இச்செயல்முறை இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

தனி அலுவலர், தையூர் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

பெறுநர்

Mr.Syed Muneer Ahmed,
M/s.House Life Housing and Properties pvt.Ltd.,
153, Eldams Road, Teynampet,
Chennai-600018.

நகல் - ஊராட்சி செயலர், தையூர் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

Scanned by CamScanner

**உறுப்பினர் செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.கி.சந்திரசேகர்,B.E., M.T.P.,**

ந.க.எண் 245/ 2016 மாஉதிகு, நாள். 20.03.2019

பொருள்: மனைப்பிரிவு - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், தையூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண் 346/2, 354/1A, 1B, 2A, 2B, 3, 355/2A, 2B, 2C, 1351/2 -ல் 5.98 ஏக்கர் அமையும் உத்தேச திருத்திய மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :

1. மனுதாரர் **Mr.Syed Muneer Ahmed,M/s.House Life Housing and Properties pvt. Ltd.,** அவர்களின் கடிதம் நாள்.07.03.2016 மற்றும் 23.10.2018.

2. மனுதாரர் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள் : 04.02.2019. (மனைப்பிரிவு சாலைப் பரப்பினை மனுதாரரால் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தானப்பத்திரம்)

3. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண் நாள் : 13.03.2019. (நன்னிலைத் தொகை, அபிவிருத்திக் கட்டணம் மற்றும் துணைக்கோள் நகர கட்டணம் செலுத்தக் கோரியது)

4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14619/1988/பிசி, நாள்.27.04.1988.

5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40483/ 2000/எல்ஏ1, நாள்.07.11.2002.

6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், அவர்கள் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007.

7. அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சித் துறை நாள்.16.06.2003.

8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.

9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.

10. 161-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண். 12 நாள் 19.02.2018.

11. மனுதாரர் கடிதம் நாள் : 16.03.2019 (நன்னிலைத் தொகை, அபிவிருத்திக் கட்டணம் மற்றும் துணை கோள் நகர கட்டணம் செலுத்தப்பட்டது).

12. நகர் ஊரமைப்பு ஆணையா, சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 3733/2018/LA1 Date : 26.02.2018.

*********

Scanned by CamScanner

1. மனைப்பிரிவு - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், தையூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண் 346/2, 354/1A, 1B, 2A, 2B, 3, 355/2A, 2B, 2C, 1351/2 -ல் 5.98 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்காக பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

2. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.உ.தி.கு எண். 21/2019** என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

3. பார்வை 7-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானபத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னர், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ),19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71, RDLA dated 16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

6. பார்வை 2-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு ஊராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலை இடத்தினை தனி புல உட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

7. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய பொறியாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

8. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

Scanned by CamScanner